www.Padasalai.Net www.Trb Tnpsc.com

| வினா எண் | அரசு உயர்நிலைப் பள்ளி, நெ.1 கொத்தூர், வேலூர் மாவட்டம்<br>முதல் இடைப் பருவத் தேர்வு<br>10 ஆம் வகுப்பு அறிவியல் விடைகள்<br>பகுதி-I |
|---|---|
| 1 | c) உந்த மாற்றம் |
| 2 | a) ஜரிஸ் |
| 3 | d) 8.31 மோல்$^{-1}$K$^{-1}$ |
| 4 | d) 14 கி |
| 5 | c) $Fe_2O_3.XH_2O$ |
| 6 | c) நீர் |
| 7 | d) அகத்தோல் |
| 8 | b) நெகமய்யா க்ரூ |
| 9 | b) 33 |
| 10 | c) நீர் |
| 11 | a) SA கணு |
| 12 | d) ஹைபோதலாமஸ் |
| | **பகுதி-II** |
| 13 | ஒவ்வொரு பொருளும் தன் மீது சமன் செய்யப்படாத புற விசை செயல்படாத வரையில் , தமது ஓய்வு நிலையையோ அல்லது நேர்க்கோட்டு இயக்க நிலையையோ மாற்றுவதை எதிக்கும் தன்மை நிலைமம் என்றழைக்கப்படுகிறது.<br>**நிலைமத்தின் வகைகள்**:<br>1. ஓய்வில் நிலைமம், 2. இயக்கத்தில் நிலைமம், 3. திசையில் நிலைமம் |
| 14 | *ஒரு கிராம் நிறையுள்ள நீரின் வெப்பநிலையை 1 °C உயர்த்தத் தேவைப்படும் வெப்ப ஆற்றலின் அளவு ஒரு கலோரி என* வரையறுக்கப்படுகிறது. |
| 15 | a) நிறை எண் b) 1.008 |

நா.வேல்முருகன் M.Sc.,B.Ed.,M.Phil.,
பட்டதாரி ஆசிரியர்
செல்: 8883711907

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

| | |
|---|---|
| 16 | a) தவறு. மோஸ்லேவின் தனிம வரிசை அட்டவணை அணு எண்ணை சார்ந்தது. b) சரி |
| 17 | "கரைசல் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பொருட்களைக் கொண்ட ஒருபடித்தான கலவை" ஆகும் |
| 18 |  |
| 19 | முயலின் பல் வாய்ப்பாடு $(I\frac{2}{1}, C\frac{0}{0}, PM\frac{3}{2}, M\frac{3}{3}.)$ |
| 20 | I) இரத்த ஓட்டத்தை ஒழுங்குப்படுத்துகிறது.<br>ii) இரத்தமானது ஒரே திசையில் செல்வதையும் மற்றும் பின்னோக்கி வருவதை தடுக்கவும் உதவுகிறது. |
| 21. | அனிச்சைச் செயல் என்பது தன்னிச்சையாகஒரு தூண்டலுக்கு பதில் விளைவாக நடக்கும் எதிர்வினை ஆகும். |
| 22 | தீர்வு:<br>U=-20cm<br>f=10cm<br>v=?<br>$\frac{1}{f}=\frac{1}{V}-\frac{1}{u}$<br>$\frac{1}{10}=\frac{1}{V}-\frac{1}{-20}$<br>$\frac{1}{v}=\frac{1}{10}-\frac{1}{-20}$<br>$\frac{1}{v}=\frac{1}{20},$<br>V=20cm<br>அதே அளவிலான , தலைகீழ் மெய் பிம்பம் தோன்றும். |
| | பகுதி-III |

நா.வேல்முருகன் M.Sc.,B.Ed.,M.Phil.,
பட்டதாரி ஆசிரியர்
செல்: 8883714907

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

| | |
|---|---|
| 23 | ✓ ராக்கெட் ஏவுதலில் நியூட்டனின் 3ம் விதி மற்றும் நேர்க்கோட்டு உந்த அழிவின்மை விதி பயன்படுகின்றன.<br>✓ எரிபொருள் எரியூட்டப்படும் போது வெப்ப வாயுக்கள் வால் பகுதியிலிருந்து அதிக திசைவேகத்தில் வெளியேறுகின்றன.<br>✓ உருவாகும் அதிக உந்தத்தை சமன் செய்ய சமமான எதிர் உந்துவிசை உருவாகி ராக்கெட் வேகத்துடன் முன்னோக்கி பாய்கிறது,<br>✓ உந்த அழிவின்மை விதிப்படி நிறை குறைய திசைவேகம் அதிகரிக்கும்<br>✓ குறிப்பிட்ட உயரத்தில் புவி ஈர்ப்பு விசையை தவிர்த்து செல்லும் வகையில் திசைவேகம் உச்சத்தை அடையும். இது விடுபடுவேகம் எனப்படும். |

24

| கிட்டப்பார்வை | தூரப்பார்வை |
|---|---|
| மையோபியா என அழைக்கப்படும் | ஹைப்பர் மெட்ரோபியா என அழைக்கப்படும் |
| விழிக்கோளம் சிறிது நீண்டு விடுவதால் ஏற்படும் | விழிக்கோளம் சுருங்குவதால் ஏற்படும் |
| அருகில் உள்ள பொருட்களைத் தெளிவாக காண முடியும். தொலைவிலுள்ள பொருகளை காண முடியாது | தொலைவிலுள்ள பொருகளை காண முடியும். அருகில் உள்ள பொருட்களைத் தெளிவாக காண முடியாது. |
| தகுந்த குழி லென்சைப் பயன்படுத்தி சரி செய்யலாம் | தகுந்த குவி லென்சைப் பயன்படுத்தி சரி செய்யலாம் |

25.

**இது நல்லியல்பு வாயிக்களின் பண்புகளை(அழுத்தம், பருமன் , வெப்பநிலை மற்றும் அணுக்களின் எண்ணிக்கை) தொடர்புபடுத்தும் சமன்பாடு ஆகும்.**

ஒரு நல்லியல்பு வாயுவானது பாயில் விதி, சார்லஸ்விதி மற்றும் அவகேட்ரோவிதிகளுக்கு உட்படும்.

பாயில் விதிப்படி,

$PV$ = மாறிலி----------------------------------------------------------(1)

சார்லஸ் விதிப்படி,

$V/T$ = மாறிலி----------------------------------------------------------(2)

அவகேட்ரோ விதிப்படி

$V/n$ = மாறிலி----------------------------------------------------------(3)

சமன்பாடு (1) (2) மற்றும் (3) சமன்பாடுகளிலிருந்து

$PV/nT$ = மாறிலி ----------------------------------------------------------(4)

மேற்கண்ட இந்த சமன்பாடு வாயு இணை- சமன்பாடு எனஅழைக்கப்படும். μ மோல் அளவுள்ளவாயுவினைக் கொண்டிருக்கும் வாயுக்களில் உள்ள மொத்த அணுக்களின்

நா.வேல்முருகன் M.Sc.,B.Ed.,M.Phil.,
பட்டதாரி ஆசிரியர்
செல்: 9488371907

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

| | |
|---|---|
| | எண்ணிக்கை அவகேட்ரோ எண்ணின்($N_A$) μ மடங்கிற்கு சமமாகும். இந்த மதிப்பானது சமன்பாடு (4ல்) பிரதியிட,<br>அதாவது $n = \mu N_A$.----------------------------------------(5)<br>சமன்பாடு (5) ஐ சமன்பாடு (4) ல் பிரதியிட,<br>$PV / \mu N_A T$ = மாறிலி<br>இந்த மாறிலி போல்ட்ஸ் மேன் மாறிலி ($k_B$ =1.381 X 10-23 $JK^{-1}$) என அழைக்கப்படுகிறது.<br>$PV / \mu N_A T = k_B$<br>$PV = \mu N_A k_B T$<br>இங்கு, $\mu N_A k_B = R$, இது **பொது வாயு மாறிலி** என அழைக்கப்படும். இதன்மதிப்பு 8.31 $J\ mol^{-1}$<br>$PV = RT$<br>இந்த நல்லியல்பு வாயுச் சமன்பாடு, குறிப்பிட்ட நிலையில் உள்ள வாயுவின் பல்வேறு காரணிகளுக்கிடையே உள்ள தொடர்பினை அளிப்பதால் இது வாயுக்களின் நிலைச்சமன்பாடு எனவும் அழைக்கப்படும். |
| 26 | ✓ அணு என்பது பிளக்கக்கூடிய துகள்<br>✓ ஒரே தனிமத்தின் வெவ்வேறு அணுக்கள் , வெவ்வேறு நிறைகளைப் பெற்றுள்ளன.(ஐசோடோப்புகள்)<br>✓ வெவ்வேறு தனிமத்தின் அணுக்கள் ஒரே நிறைகளைப் பெற்றுள்ளன( ஐசோபார்கள்)<br>✓ அணு என்பது வேதி வினையில் ஈடுபடும் மிகச் சிறிய துகள். |
| 27 | **கரைப்பொருள் மற்றும் கரைப்பானின் தன்மை**<br>✓ ஒத்த கரைப்பொருள்கள் ஒத்த கரைப்பானில் கரைகிறது.<br>✓ முனைவுறும் சேர்மங்கள் முனைவுறும் கரைப்பானில் கரைகிறது.(எ.கா: சோடியம் குளோரடு நீரில் கரைகிறது)<br>**வெப்பநிலை:**<br>✓ வெப்ப கொள் செயல் முறையில் வெப்பநிலை அதிகரிக்கும் போது, நீர்ம கரைப்பாணில் திண்மங்களின் கரைதிறன் அதிகரிக்கும். வெப்ப உமிழ் செயல் முறையில் குறையும்.<br>✓ வெப்பநிலை அதிகரிக்கும் போது நீரில் சக்கரை கரைவது அதிகரிக்கிறது<br>✓ வெப்பநிலை அதிகரிக்கும் போது திரவத்தில் வயுக்களின் கரைதிறன் குறைகிறது.<br>**அழுத்தம்:**<br>✓ அழுத்தத்தை அதிகரிக்கும் போது ஒரு திரவத்தில் வாயுவின் கரைதிறன் அதிகரிக்கிறது. |

நா.வேல்முருகன் M.Sc.,B.Ed.,M.Phil.,
பட்டதாரி ஆசிரியர்
செல்:8883711907

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

28

| திசுக்கள் | இருவித்திலை தாவர தண்டு | ஒருவித்திலை தாவர தண்டு |
|---|---|---|
| புறத்தேலடித்தோல் | கோலன்மைமா | ஸ்கிளிரன்கைமா |
| தளத்திசு | புறணி, அகத்தோல் பெரிசைக்கிள் மற்றும் பித் என வேறுபட்டு காணப்படுகிறது | இவ்வாறான வேறுபாடு காணப்படவில்லை |
| இரண்டாம் நிலை வளர்ச்சி | உண்டு | பெரும்பாலும் இல்லை |
| வாஸ்குலார் கற்றை | i) குறைவான எண்ணிக்கை மற்றும் சம அளவுடையவை<br>ii. வளைய வடிவில் உள்ளது<br>iii. திறந்தவை<br>iv. கற்றை உறை இல்லை | i) அதிகமான எண்ணிக்கை ஓரங்களில் சிறியதாகவும் மையத்தில் பெரியதாகவும் உள்ளது.<br>ii. சிதறிக் காணப்படுகிறது<br>iii. மூடியவை<br>iv. கற்றை உறை உண்டு |
| பித் | உண்டு | இல்லை |

29

1) வளைதல் அல்லது ஊர்தல் முறை,

2) நீந்துதல் முறை,

**வளைதல் அல்லது ஊர்தல் முறை:**

- ✓ இது தசைகளின் சுருக்கம் மற்றும் நீள்தல் மூலம் நடைப்பெறுகிறது.
- ✓ இயக்கத்தின் போது ஒட்டிக் கொள்ள இரு உறிஞ்சிகளும் உதவுகின்றன.

**நீந்துதல் முறை:**

- ✓ அலை இயக்கத்தை மேற்கொள்றது.

நா.வேல்முருகன் M.Sc.,B.Ed.,M.Phil.,
பட்டதாரி ஆசிரியர்
செல்: 8883741907

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

| | |
|---|---|
| 30 | சுவாச நிறமியான ஹீமோகுளோபினை RBC கொண்டுள்ளதால் இரத்தம் சிவப்பு நிறமாக காணப்படுகிறது.<br>**இரத்தத்தின் பணிகள்:**<br>✓ சுவாச வாயுக்களைக் கடத்துகிறது.( ஆக்ஸிஜன் மற்றும் $CO_2$)<br>✓ நோய் தாக்குதலிருந்து உடலைப் பாதுகாக்கிறது.<br>✓ உடலின் நீர்ச்சமனிலையைப் பராமரிக்கிறது<br>✓ செரிமாணம் அடைந்த உணவுப் பொருள்களை அனைத்து செல்களுக்கும் கடத்துகிறது |
| 31 | <br>நியூரான் மூன்று முக்கிய பகுதிகளைக் கொண்டது.<br>1.சைட்டான் 2. டெண்ட்ரைட்டுகள் 3. ஆக்சான்<br>**சைட்டான்:**<br>சைட்டான் - செல் உடலம் அல்லது பெரிகேரியோன்-மைய உட்கரு- சைட்டோபிளாசம்-**நியூரோபிளாசம்**-நிசில் துகள்கள்- மைட்டோகாண்ட்ரியா - ரிபோசோம்கள்-, லைசோசோம்கள்-எண்டோபிளாச வலைப்பின்னல்-நியூரான்கள் பகுப்படையும். செல் உடலத்தின் வழியே நரம்பு துண்டலை கடத்தும்<br>**டெண்ட்ரைட்டுகள்:**<br>செல் உடலம்-பல கிளைகள்-நரம்பு தூண்டலை சைட்டானை நோக்கி கடத்தும்.<br>**ஆக்சான்:**<br>நீளமான மெல்லிய அமைப்பு-முடிவு பகுதி – நுண்ணிய கிளைகள்-சினாப்டிக் குமிழ் – பிளாஸ்மா சவ்வு-ஆக்ஸோலெம்மா, பிளாஸ்மா சவ்வு-ஆக்ஸோபிளாசம்-மையலின் உறை-பாதுகாப்பு உறை-ஸ்வான் செல்கள்-நியூரிலெம்மா-தொடர்ச்சியான இடைவெளிகள்-ரேன்வீரின் கணுக்கள்-ஆக்சான் தூண்டல்களை சைட்டானில் இருந்து எடுத்துச் செல்கின்றன.<br>**சினாப்ஸ்:**<br>சினாப்டிக் குமிழ் பகுதி-டெண்ட்ரான் இணையும் பகுதி-சினாப்ஸ்<br>தகவல்களை வேதிப் பொருள்களான நியூரோடிரான்ஸ்மிட்டர்கள்-கடத்தப்படுகின்றன. |
| 32 | செம்பழுப்பு உலோகமாதலால் A என்பது காப்பர்<br>காப்பர் ஆனது $O_2$ உடன் 1370K க்கு கீழ் வினைப்பட்டு காப்பர்(II) ஆக்சைடைத் தருகிறது. எனவே B காப்பர்(II) ஆக்சைடு.<br>$2Cu + O_2 \rightarrow 2CuO$ (காப்பர்(II) ஆக்சைடு)<br>(A) (B)<br>காப்பர் $O_2$ உடன் 1370K க்கு மேல் வினைப்பட்டு காப்பர்(I) ஆக்சைடைத் தருகிறது. எனவே C காப்பர்(I) ஆக்சைடு. |

நா.வேல்முருகன் M.Sc.,B.Ed.,M.Phil.,
பட்டதாரி ஆசிரியர்
செல்: 8883711907

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

| | |
|---|---|
| | $2Cu + O_2 \rightarrow 2Cu_2O$ (காப்பர்(I) ஆக்சைடு)<br>(A) (C)<br><table><tr><td>சேர்மம்</td><td>பெயர்</td><td>வாய்பாடு</td></tr><tr><td>A</td><td>காப்பர்</td><td>Cu</td></tr><tr><td>B</td><td>காப்பர்(II) ஆக்சைடு</td><td>CuO</td></tr><tr><td>C</td><td>காப்பர்(I) ஆக்சைடு</td><td>$Cu_2O$</td></tr></table> |
| | **பகுதி-IV** |
| 33.a | **i) ராலே சிதறல் விதி**:ஓர் ஒளிக்கதிர் சிதறலடையும் அளவானது, அதன் அலைநீளத்தின் ான்மடிக்கு எதிர்த் தகவில் இருக்கும்.<br>சிதறல் அளவு $\propto \frac{1}{\lambda^4}$<br>ii) **வானம் நீல நிறமாகத் தோன்ற காரணம்**:<br>சூரிய ஒளியானது, வளிமண்டலத்தின் வழியாகச் செல்லும் போது, குறைந்த அலைநீளம் உடைய நீல நிறமானது, அதிக அலைநீளம் கொண்ட சிவப்பு நிறத்தை விட அதிகமாக சிதறல் அடைகிறது. இதனால் வானம் நீல நிறமாகத் தோன்றுகிறது.<br>iii) **ஒளியின் பண்புகள்**:<br>✓ ஒளி என்பது ஒரு வகை ஆற்றல்.<br>✓ ஒளி எப்போதும் நேர்க்கோட்டில் செல்கிறது.<br>✓ ஒளி பரவுவதற்கு ஊடகம் தேவையில்லை.<br>✓ காற்றில் அல்லது வெற்றிடத்தில் ஒளியின் திசைவேகம் $C = 3 \times 10^8$ மீ வி$^{-1}$<br>✓ v) ஒளியின் வெவ்வேறு நிறங்கள், வெவ்வேறு அலைநீளங்கள் மற்றும் வெவ்வேறு அதிர்வெண்களை பெற்றிருக்கும். |
| 33.b | i)பாயில் விதி:*மாறா வெப்பநிலையில், ஒரு குறிப்பிட்ட நிறையுடைய வாயுவின் அழுத்தம் அவ்வாயுவின் பருமனுக்கு எதிர்த்தகவில் அமையும்.*<br>$P \propto \frac{1}{V}$<br>ii) திரவத்தை கொள்கலனில் நிரப்பி திரவத்தின் நிலையை $L_1$ எனக் குறித்துக் கொள்ள வேண்டும். வெப்பப்படுத்தும் போது திரவம் விரிவடைவதால் பருமன் குறைவதாகா தோன்றும். இந்த நிலை $L_2$. மேலும் வெப்பப்படுத்த விரிவடையும் விரிவடையும். இந்த நிலை $L_3$<br>$L_1$ மற்றும் $L_3$ க்கு இடையேயான வேறுபாடு தொற்ற வெப்ப விரிவு. |

நா.வேல்முருகன் M.Sc.,B.Ed.,M.Phil.,
பட்டதாரி ஆசிரியர்
செல்: 9488374907

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

| | |
|---|---|
| | $L_2$ மற்றும் $L_3$ க்கு இடையேயான வேறுபாடு உண்மை வெப்ப விரிவு<br>உண்மை வெப்ப விரிவு, தொற்ற வெப்ப விரிவை விட அதிகம்.<br>உண்மை வெப்ப விரிவு=$L_3$-$L_2$.<br>தொற்ற வெப்ப விரிவு=$L_3$-$L_1$<br> |
| 34.a | i) தீர்வு:<br>Ca=40, C=12, O=16<br>கால்சியம் கார்பனேட்டின் மூலக்கூறு வாய்பாடு=$CaCO_3$<br>மூலக்கூறு நிறை=1[Ca]+1[C]+3[O]<br>=1[40]+1[12]+3[16]<br>=100கி<br>தனிமத்தின் சதவீத இயைபு=$\frac{\text{தனிமத்தின் மொத்த நிறை}}{\text{சேர்மத்தின் மூலக்கூறு நிறை}}$X100<br>கால்சியத்தின் சதவீத இயைபு=$\frac{40}{100}$X100<br>=40%<br>கார்பனின் சதவீத இயைபு =$\frac{12}{100}$X100<br>=12%<br>ஆக்ஸிஜனின் சதவீத இயைபு=$\frac{3[16]}{100}$X100<br>=48%<br>ii) தீர்வு:<br>Al=27, O=16, S=32<br>$Al_2(SO_4)_3$ ன் மூலக்கூறு நிறை=2[Al]+3[S]+12[O]<br>=2[27]+3[32]+12[16]<br>=54+96+192<br>=342கி<br>தனிமத்தின் சதவீத இயைபு=$\frac{\text{தனிமத்தின் மொத்த நிறை}}{\text{சேர்மத்தின் மூலக்கூறு நிறை}}$X100<br>ஆக்ஸிஜனின் சதவீத இயைபு=$\frac{12[16]}{342}$X100<br>=$\frac{192}{342}$X100<br>=56.14% |
| 34.b | i) அலுமினியத்தின் தாதுக்கள்:<br>பாக்சைட், கிரையோலைட், கொரண்டம் |

www.Padasalai.Net

நா.வேல்முருகன் M.Sc.,B.Ed.,M.Phil.,
பட்டதாரி ஆசிரியர்
செல்: 8883771907

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.com

| | |
|---|---|
| | ii) அலுமினியப் பவுடரும், இரும்பு ஆக்சைடும் கொண்ட கலவையை சூடாக்கும் போது இரும்பு ஆக்சைடு இரும்பாக ஒடுக்கப்படுகின்றது. இவ்வினை அலுமினிய வெப்ப ஒடுக்கவினை ஆகும்.<br>$Fe_2O_3 + 2\,Al \rightarrow 2\,Fe + Al_2O_3 +$ வெப்பஆற்றல்<br>iii) **பயன்கள்**<br>✓ வீட்டுப் பாத்திரங்கள் செய்யப் பயன்படுகிறது.<br>✓ மின்கம்பி செய்யப் பயன்படுகிறது.<br>✓ விமானம் மற்றும் தொழில் இயந்திரங்களின் பாகங்களைச் செய்யப் பயன்படுகிறது. |
| 35.a | i)**நீராவிப்போக்கு**:தாவரத்தின் புற உறுப்புகளிலிருந்து குறிப்பாக இலையின் புறத்தோல் துளை வழியாக நீரானது ஆவியாக வெளியேறுவதே **நீராவிப்போக்கு** எனப்படும்.<br><br>ii)**நீராவிப் போக்கினை பாதிக்கும் காரணிகள்** :நீராவிப்போக்கினைப்பாதிக்கும் வெளிபுறக்காரணிகள் வெப்பநிலை, ஒளி, ஈரப்பதம் மற்றும் காற்றின் திசைவேகம். உட்புறக்காரணிகள் இலைத்துளையின் எண்ணிக்கைமற்றும் விரவல், திறந்தநிலையிலுள்ளஇலைத்துளைகளின் சதவீதம், தாவரத்தில் இருக்கும் நீரின் அளவு, தாவரத்தின் அமைப்பு<br><br>iii) **நீராவிப் போக்கின் முக்கியத்துவம்**<br>✓ நீராவிப்போக்கின் இழுவிசையின் காரணமாகநீரானது மேலேசெல்லகாரணமாகிறது.<br>✓ ஒளிச்சேர்க்கைக்கு தேவையான நீர் கிடைக்கிறது.<br>✓ கனிமங்கள் தாவரத்தின் அனைத்துப்பகுதிகளுக்கும் செல்லஉதவுகிறது.<br>✓ இலைகளின் மேற்பரப்பு குளிர்ச்சியாகஇருக்க நீராவிப்போக்கு உதவுகிறது.<br>✓ செல்கள் விறைப்புத்தன்மையுடன் இருக்கச் செய்கிறது. இதனால் அவற்றின் வடிவம் மாறாமலும் இருக்க உதவுகிறது. |
| 35.b | மூளையின் அமைப்பு, பணிகள்-புத்தகத்தை பார்க்கவும் |

குறிப்பு: தவறுகள் ஏதேனும் இருந்தால் தயவு செய்து தெரியப்படுத்தவும் .

நா.வேல்முருகன்M.Sc.,B.Ed.,M.Phil.,
பட்டதாரி ஆசிரியர்
செல்:8883711907

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com